தனிச்சுற்றுக்கு மட்டும்

தோ ... தோ ... தோ ... தோ ... லாமிதோ ...
தோ ... தோ ...தோ ... தோ... லாமிதோ ...
தடபுடக்கா மெலேங்கே லாமிதோ ...
மாடோட்டி போகோயோ லாமிதோ ...
தோ ... தோ ...தோ ... தோ... லாமிதோ ...
தோ ... தோ ...தோ ... தோ... லாமிதோ ...
தடபுடக்கா மெலேங்கே லாமிதோ ...
ஆடோட்டி போகோயோ லாமிதோ ...
மாடுக்கொரு கன்னு ...
எனக்கொரு கன்னு ...
மாடுக்கொரு கன்னு ...
எனக்கொரு கன்னு ...
தோ ... தோ ...தோ ... தோ... லாமிதோ ...
தோ ... தோ ...தோ ... தோ... லாமிதோ ...

பரளி வனச்சிறுவனின் பாட்டு





# தும்பி

சிறுவர் மாத இதழ்



கனியை உண்பது யாராக இருந்தாலும்,
விதையை விதைப்பது நாமாக இருப்போம் ...

தும்பி சிறுவர் மாத இதழ் ● ஆகஸ்ட் 2016 ● தனிச்சுற்றுக்கு மட்டும் ● கதைத்தேர்வு : புளியானூர் சாதிகா ● நிர்வாக ஆசிரியர் : அழகேஸ்வரி ● ஆசிரியர் : சிவராஜ் ● வடிவமைப்பு : கல்ஆல் ● தொடர்புக்கு : எண் 60/86. ஐயங்குளத் தெரு, திருவண்ணாமலை 606 601. பேச - 9843870059 *thumbigal@gmail.com*

பிரார்த்தனை

ஐரோம் ஷர்மிளாவிற்கு

நன்றியும் ப்ரியமும் ...

பீட்டர் ஜெயராஜ், விநாயகம், மணிவண்ணன், அய்யலு குமரன், பிரான்சிஸ் கிருபா, சுபத்ரா, ஸ்ரீதர் நெடுஞ்செழியன், ரமணா, ஜான் ஜோசப், பாலமுரளி, தமிழ்ச்செல்வன், நிசாந்த், மா. சரவணன், அகமலை விஜயராஜ், சித்திரைச் செல்வன், விக்னேஷ், அஸ்வத், கவி ஷாலினி, பால்முகில் அட்சயா, பாண்டி பிரவீன், பேரறிவாளன், ஸ்வேதா, ஜீவன் ஆதித்யா, உடுமலை விசாலாட்சி பள்ளி

வணக்கம் செல்லங்களே,

எல்லாரும் நல்லா இருக்கீங்க தான? தும்பியோட மூன்றாவது முத்தம் உங்களுக்காக. புத்தகத்துக்கு நடுவுல வச்சிருக்க மயிலிறகு குட்டிபோடுற மாதிரி மெல்ல மெல்ல பள்ளிக்கூடங்களுக்கு உள்ளே தும்பி பறக்க ஆரம்பிச்சிருக்கு.

இவ்வளவு தூரம் பறந்துவந்த வலி குழந்தைங்க உங்க கையால தடவிக்கொடுக்கும்போது காணாமப்போச்சு.

வீட்ல இருக்க செடி எல்லாத்துக்கும் தண்ணி ஊத்துறீங்களா?

பறவைகளுக்கு சின்ன தட்டுல தானியம் வச்சீங்களா?

இதோ,

இப்பயும் உங்களுக்காக கொடுக்க என்கிட்ட ஒரு அழகான கதை இருக்கு. பெரிய்ய்ய்ய... மரம், சின்ன்ன்ன.... பையன் இந்த ரெண்டுபேரோட அன்பான வாழ்க்கைதான் இந்த கதை.

படிச்சுமுடிச்சு எப்படி இருந்துச்சுன்னு எனக்கும் உங்களுக்கு பிடிச்சவங்களுக்கும் சொல்லுவீங்களா?

சரி சரி...

ம்... பறக்க ஆரம்பிக்கலாமா

வாங்க வாங்க தும்பிகளா ...

கதைமரம் நமக்காக காத்திருக்கு
அதுல பழுத்து இருக்குற கதைகள பறிச்சு தின்போம்.

அன்புடன்

தும்பி



# உயிர்தரும் மரம்

ஷெல் சில்வர்ஸ்டீன்
தமிழில் : சிறகினி
ஓவியங்கள் : கோயில்பிச்சை பிரபாகர்



அது அழகான, மிகவும் ருசியான ஆப்பிள்
பழங்களை கொண்ட ஒரு ஆப்பிள் மரம்.

அதன் கிளைகளில் தினமும்
ஏராளமான பறவைகள் வந்து
அமர்ந்து ஓய்வெடுக்கும்,

அதன் பழங்களை கொத்தித்
தின்னும். சில அதில் கூடு கட்டிக்
கொள்ளும்.



சுட்டி சிறுவன் ஒருவன் தினந்தோறும் அந்த மரத்திடம் வந்து அதோடு விளையாடுவான். அந்த மரத்துக்கு சிறுவனை மிகவும் பிடிக்கும். இருவரும் அன்பான நண்பர்கள் ஆனார்கள்.


மரத்தின் மீது ஏறி அதன் கிளைகளில் தொங்கிக் கொண்டும், ஒரு கிளையில் இருந்து மற்றொரு கிளைக்கு தாவிக்கொண்டும் இருப்பான். கிளைகளில் உட்கார்ந்து ஊஞ்சலாடுவான்.



பசிக்கும் போது அதன் ஆப்பிள் பழங்களை பறித்து சாப்பிடுவான்.

சிறுவன் மரத்திடம் பாசத்தோடு பழகி வந்தான், மரமும் அவனிடம் அன்பாக இருந்தது. இருவரும் மகிழ்ச்சியாக விளையாடி குதூகலித்தனர்.





சிறுவன் மரத்தின் பின்னால் ஒளிந்து கொள்வான்.

அவர்கள் இருவரும் சேர்ந்து கண்ணாமூச்சி விளையாடுவார்கள்.

விளையாடி விளையாடி களைத்துப் போகும் போதெல்லாம் ஆப்பிள் மரத்தின் நிழலில் ஓய்வெடுத்து படுத்துக்கொள்வான்.



உதிர்ந்து கிடக்கும் அதன் இலைகளை எடுத்து கிரீடம் போல செய்து தன்னை காட்டின் ராஜாவாக நினைத்து விளையாடுவான்.

மரம் அதை ரசித்து தனது கிளைகளை அசைத்து நாட்டியம் ஆடி சிரித்து மகிழும்.







நாட்கள் வருடங்களாக வளர்ந்தன. சிறுவன் வளர்ந்து பெரியவன் ஆனான். பல நாட்கள் ஆகியும் அவன் மரத்தை பார்க்க வரவேயில்லை.

கவலையுடன் மரம் தனியே நின்றது. அவனை எதிர்பார்த்து நிறைய காலம் காத்திருந்தது.

ஒருநாள் பெரியவனான சிறுவன் மரத்தை பார்க்க வந்தான். சிறுவனை பார்த்து மரத்துக்கு அளவில்லாத மகிழ்ச்சி, தனது கிளைகளை அசைத்து அவனை வரவேற்றது.

மரம் சிறுவனிடம் ''வா சிறுவனே, வந்து எனது தண்டின் மீது ஏறி கிளைகளில் அமர்ந்து ஊஞ்சலாடு. பழங்களை பறித்து சாப்பிடு, எனது நிழலில் அமர்ந்து விளையாடு, களைத்துப் போகும் போது ஓய்வெடு. மகிழ்ச்சியாக இரு'' என்றது.

அதற்கு சிறுவன் ''மரமே, இப்பொழுது நான் வளர்ந்து பெரியவனாகிவிட்டேன், உன் மீது ஏறி விளையாடும் வயதெல்லாம் கடந்து விட்டேன். இப்பொழுது என்னால் அப்படி விளையாட முடியாது. எனக்கு நிறைய விளையாட்டு பொருட்களைக் கொண்டு விளையாட விருப்பம், ஆனால் அதை வாங்க என்னிடம் அவ்வளவு பணம் இல்லை'' என்று கவலையுடன் சொன்னான்.





தனது நண்பனாகிய சிறுவனுக்கு உதவ நினைத்த மரம், ''கவலைப்படாதே, என்னிடம் பணம் இல்லை, ஆனால் என்னிடம் நிறைய இலைகளும், ருசியான ஆப்பிள் பழங்களும் உள்ளன.

பழங்களை எடுத்துக் கொண்டு நகரத்துக்குப் போய் விற்று, அதில் கிடைக்கும் பணத்தில் உனக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு மகிழ்ச்சியாக இரு'' என்று ஆறுதல் சொன்னது.

அதைக்கேட்ட சிறுவனும் மரத்தின் பழங்களை பறித்து தனது கூடையில் அடுக்கி நகரத்துக்கு எடுத்துச் சென்றான். அந்த பழங்கள் அனைத்தும் விற்றுத் தீர்ந்தன, அவனுக்கு நிறைய பணம் கிடைத்தது.
அதைக்கொண்டு தனக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் வாங்கினான்.



அதன் பிறகு பல நாட்களாகியும் அவன் மரத்தை பார்க்க திரும்ப வரவே இல்லை, மரம் மிகுந்த வேதனையுடன் வாழ்ந்தது.

பிறகு ஒருநாள் அவன் மரத்தை பார்க்க மீண்டும் வந்தான். நண்பனை கண்ட மரத்துக்கு அளவில்லாத ஆனந்தம். மகிழ்ச்சியில் தனது கிளைகளை அசைத்து நடனம் ஆடியது. ''வா நண்பனே, வந்து எனது தண்டின் மீது ஏறி கிளைகளில் அமர்ந்து ஊஞ்சலாடு. பழங்களை பறித்து சாப்பிடு, எனது நிழலில் அமர்ந்து விளையாடு, களைத்துப் போகும் போது ஓய்வெடு. மகிழ்ச்சியாக இரு'' என்று அதே அன்புடன் சொன்னது.

அவன் ''எனக்கு அதெற்கெல்லாம் இப்பொழுது நேரமில்லை, எனக்கு பாதுகாப்பாக தங்குவதற்கு ஒரு வீடு வேண்டும். மனைவி வேண்டும், குழந்தைகள் வேண்டும் அவர்களுடன் வசிக்க எனக்கொரு வீட்டை தர முடியுமா?'' என்றான்.

''ஓ!, என்னிடம் வீடு இல்லையே, இந்த காடு தான் எனது வீடு. ஆனால் நீ எனது கிளைகளை வெட்டிக் கொண்டு போய் உனக்கான வீட்டை கட்டிக்கொள், மகிழ்ச்சியாக இரு நண்பனே'' என்றது மரம்.

அதைக்கேட்டதும் மகிழ்ந்து போன அவனும், மரத்தின் கிளைகளை வெட்ட ஆரம்பித்தான், வெட்டி முடித்ததும் அதை சுமந்து சென்றான். மகிழ்ச்சியாக அவன் போவதைப் பார்த்த மரம் நிம்மதி அடைந்தது. ஆனால் அதனால் முன்பு போல் தனது கிளைகளை அசைத்து நடனம் ஆட முடியவில்லை.





திரும்பவும் வெகுநாட்கள் ஆகியும் சிறுவன் அந்த மரத்தை பார்க்க வரவே இல்லை, ஆனாலும் மரம் அவனுக்காக காத்திருந்தது. சிலகாலம் கழித்து ஒருநாள் அவன் திரும்பி வந்த பொழுது மரத்தின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஆனால் கிளைகள் இல்லாததால் பேசவே சிரமப்பட்டது.

மிகவும் மெல்லிய குரலில், ''வா சிறுவனே, வந்து எனது மீது ஏறி விளையாடு. மகிழ்ச்சியாக இரு'' என்றது

அதற்கு அவன் ''நான் வயதானவனாகவும் கவலையாகவும் இருக்கிறேன், என்னால் இப்பொழுது விளையாட முடியாது. எனக்கு ஒரு படகு வேண்டும் , அதில் ஏறி நான் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டும். எனக்கு ஒரு படகை தர முடியுமா?'' என்று கேட்டான்

கொஞ்சம்கூட யோசிக்காத மரம் ''எனது தண்டுப்பகுதியை வெட்டி ஒரு படகை செய்து கொண்டு உனது பயணத்தை தொடங்கு, மகிழ்ச்சியாக இரு'' என்றது.

பெரியவனான அந்த சிறுவனும் மரத்தின் தண்டுப்பகுதியை வெட்டி ஒரு படகை செய்து பயணத்தை தொடங்கினான். எல்லாவற்றையும் இழந்து அத்தனையையும் தாங்கிக்கொண்டு மரம் மகிழ்ச்சியாகவே இருந்தது

... ஆனால் உண்மையில் அது கவலைப்பட்டது அச்சிறுவனுக்காக.





நாட்கள் மாதங்களாகின, மாதங்கள் வருடங்களாகின. பல வருடங்கள் கழித்து சிறுவன் தாத்தாவாகி திரும்பி வந்தான். அவனைப்பார்த்து மரம் ''என்னை மன்னித்துவிடு நண்பனே, உனக்கு கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றும் இல்லை, எனது ஆப்பிள் பழங்கள் ஒன்று கூட இல்லை, இருந்தால் உனக்கு சாப்பிடக் கொடுப்பேன். என்னை மன்னித்துவிடு'' என்றது.

''பழங்களை கடித்து தின்ன எனக்கு பற்கள் உறுதியாக இல்லை'' என்றான்.

''நீ தாவி ஊஞ்சலாட எனக்கு கிளைகள் இல்லை'' என்றது மரம். அதற்கு அவனோ ''எனக்கு வயதாகி விட்டது என்னால் ஏறி ஊஞ்சலாட முடியாது'' என்றான்.

''நீ ஏறி விளையாட தடித்த தண்டுப்பகுதி கூட என்னிடம் இல்லை'' என்றது. அதற்கு அவன் ''ஏறி விளையாட எனக்கு தெம்பு இல்லை'' என்றான்.

''நான் மிகவும் வருந்துகிறேன்'' என்று பெருமூச்சுடன் மரம் தொடர்ந்து சொன்னது. ''உனக்கு உபயோகமாக எதையாவது கொடுக்க விரும்புகிறேன் ஆனால் உனக்கு கொடுக்க இப்பொழுது என்னிடம் ஒன்றும் இல்லை. அடிமரத்தின் தண்டு மட்டுமே மிச்சம் உள்ளது, என்னை மன்னித்துவிடு'' என்றது.





அவன் , ''எனக்காக எதுவும் தேவையில்லை, நான் களைப்பாக இருக்கிறேன். உடல் தளர்ந்துவிட்டது. அமைதியான ஒரு இடத்தில் அமர்ந்து ஓய்வெடுக்க விரும்புகிறேன்'' என்றான்.

சரி என்று சொன்ன மரம் தன்னை எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீராக்கி, ''பழைய அடிமரத்தண்டு உட்கார்ந்து ஓய்வெடுக்க சிறந்தது. வா, வந்து எனது அடிமரத் தண்டில் அமர்ந்து ஓய்வெடுத்துக்கொள்'' என்றது.

சோர்ந்து தள்ளாடி வந்து அதில் அமர்ந்த அந்த தாத்தாவான சிறுவனும், எதிர்பார்ப்பு இல்லாமல் எதையுமே இல்லை என்று சொல்லாமல் இவ்வளவு அன்பை கொடுத்துக்கொண்டே இருக்கும் மரத்துக்கு நான் என்ன செய்தேன் என்று நினைத்து கண்ணீர் விட்டான்.





மரத்தின் தீராத அன்பை உணர்ந்த அவன், தன் கால்களுக்கு கீழே பறவையின் எச்சத்தில் விழுந்து கிடந்த விதைகளை கைகளில் எடுத்தான். அந்த ஆப்பிள் மரத்தின் வெட்டப்பட்ட அடிமரத்தண்டின் அருகில் விதைக்க ஆரம்பித்தான்.

கொஞ்ச நேரத்தில் மழை பெய்தது.



*THE GIVING TREE*

Shel silverstien

Once there was a apple tree ... And she loved a little boy. Every day the boy would come ... and he would gather the leaves and play king in the forest. He would climb up her trunk, and swing from her branches. And he eat apples. And they would play hide-and-go-seek. When he was tired, he would sleep in her shade. The boy loved the tree very much, the tree was happy. But time went by, and the boy grew older. The tree was often alone.

Then one day the boy came to the tree. And the tree said, "Come boy. Come and climb up my trunk and swing from my branches and eat apples and play in my shade and be happy."

"I am too big to climb and play," said the boy.

"I want to buy things and have fun. I want some money?"

"But I have no money. I have only apples and leaves. Boy, take my apples and sell them in the city. Then you will have money and you will be happy."

And so the boy climbed up the tree and gathered her apples and carried them away. The tree was happy. But the boy stayed away for a long time ...

And the tree was sad. Then one day the boy came back and the tree shook with joy and she



said, "Come boy. Climb up my trunk and swing from my branches and be happy."

"I am to busy to climb tree's." said the boy.

"I want a house to keep me warm." He said.

"I want a wife and I want children and so I need a house. Can you give me a house?"

"But you may cut off my branches and build a house. Then you will be happy."

And so the boy cut off her branches and carried them away to build his house. And the tree was happy. But the boy stayed away for a long time. And when he come back, The tree was so happy she could hardly speak. "Come boy," she whispered, "Come and play."

"I want a boat that will take me far from here. Can you give me a boat?" "Cut down my trunk and make a boat," said the tree. "Then you can sail away... and be happy."

And so the boy cut down her trunk and made a boat and sailed away. And the tree was happy... But not really.

And after a long time the boy came back again. "I am sorry, Boy," said the tree, "I have nothing left to give you. My apples are gone," said the tree.

"My teeth are too weak for apples," said the boy.

"My branches are gone, you cannot swing on them." said the tree.

"I am too old to swing on branches," said the boy.

"My trunk is gone, you can not climb ..." said the tree.

"I am too tired to climb," said the boy.

"I am sorry," sighed the tree.

"I wish I could give you something ... but I have nothing left. I am just an old stump. I am sorry ..."

"I do not need very much now," said the boy, "Just a quiet place to sit and rest. I am very tired."

"Well," said the tree, straightening her self up as much as she could, "Well, an old stump is good for sitting and resting. Come boy. Sit down and rest."

The boy sat on the stump of the tree and started thinking "This tree gave me so much. It never asked me anything ever. What can I do in return?"

With tear in the eyes he stood up, found some bird dropped seeds nearby. He started planting them next to the apple tree's old stump.

The rain gets started.



யாரெல்லாம் நட்சத்திரத்துக்கு வர்றீங்க ...

நான் ...

நான் ...

இதுக்கு முன்னாடி யாராவது அங்க போயிருக்கீங்களா ...

இல்ல ...

ம் ... கூம் ...

நான் போயிருக்கேன்!

எப்பப்போன ...!

நேத்து நைட்டு கனவுல ...

கனவுலயா ...! சொல்லீருந்தா நாங்களும் கூட வந்துருப்போம்ல ...

சரி, எதுக்கு அங்க போன ...?

நட்சத்திரத்த தொட்டுப் பாக்கனும்ணு ஆசையா இருந்துச்சு,

அதான் போனேன்.

ஓஹோ ...

குட்டி ஆகாயம்

சிறார் காலாண்டிதழ் வாசியுங்கள்

தொடர்புக்கு : 9843472092